# பிரித்தானிய தமிழர் பேரவை
# பிரித்தானியா

மே 25, 2022

## உடனடி வெளியீட்டுக்காக

### முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவு நாள்
### பிரித்தானிய தமிழர் பேரவை உரை

**Date: 18 May 2022**

**Venue: Trafalgar Square, London**

*அனைவருக்கும் வணக்கம்.*

*சிங்கள தேசத்தின் கொடூரமான இராணுவ அடக்குமுறைகளால் பலியெடுக்கப்பட்ட எம் தமிழ் உறவுகளையும் 48ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள அரசினால் நடைமுறைப்படுத்தபட்டு வரும் தமிழின அழிப்பையும் இன்று நினைவு கூருகின்றோம்.*

*முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளானது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒரு இனவாத அரசினால் தம் சுதந்திரத்திற்காகப் போராடிய மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலையை இவ் உலகத்திற்கு எடுத்து காட்டும் ஒரு "**குறியீடு**" ஆகும்.*

*எம் இனிய உறவுகளையும் வீட்டையும் நாட்டையும் நாம் இழந்திருந்தாலும் நாம் எமது உள்ள உறுதியை மீண்டும் ஒரு தடவை திடப்படுத்தி கொண்டு எமக்கெதிரான போராட்ட களங்கள், எந்த வடிவத்தில் எம் மீது திணிக்கப்பட்டாலும் அவற்றை தமிழ் மக்கள் யாவரும் ஒற்றுமையாக நின்று எதிர்த்து போராடி வெற்றி கொள்வதற்கு திட சங்கல்பம் பூணும் நாளும் இதுவேயாகும்.*

*இனவழிப்பு போரின் பின் எம் மக்களிடையே உருவாக்கப்பட்ட தோல்வி மனப்பான்மை, குழுவாதம், நடைமுறைசாத்தியமற்ற அதி தீவிரவாதம், போராட்ட குணத்துடன் தொடர்ச்சியாக செயல்படாமை, வினைத் திறனற்ற வாய் பேச்சுக்கள் போன்ற குணாதிசயங்களால் எம் விடுதலைக்கான பாதை தடைபட்டு போகாமல் பேணிக் காத்து, நீண்ட உறுதியான ஆழமான தேசிய பார்வை கொண்ட தேசாபிமானிகளை ஒன்றிணைத்து செயல்திறன் மிக்க தேச விடுதலை நோக்கிய வழி வரைபடத்தின் அடிப்படையில் நாம் எமது செயல்பாடுகளை உருவாக்கி படிப்படியாக பல நாடுகளிலுள்ள சகோதர அமைப்புகளுடன் கூட்டு வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஆற்றப்பட்ட முயற்சிகளால் பல நேச சக்திகளை வென்றெடுப்பதில் நாம் கணிசமாக முன்னேறி உள்ளோம்.*

*இலங்கைத் தீவில் இன்று உள்ள நெருக்கடி வெறுமனே பொருளாதாரம் சார்ந்தது என்பது தவறு. அதற்கான நிலையான தீர்வு இன அழிப்புக்கான காரணிகளை களைந்தெறிவதுடன் பிணைக்கப்பட்டுள்ளது.*

*சிங்கள பௌத்த வாதமானது தமிழ் மக்களை கொன்றொழித்து முற்று முழுதாக சிங்கள பௌத்தர்கள் மாத்திரமே வாழ முடியுமென்ற அடிப்படை மகாவம்ச வாதத்தினால் உருவாக்கப்பட்ட அரச, இராணுவ கட்டமைப்புகள் இலங்கைத் தீவினை வளர்ச்சிப் பாதைக்கு மாறாக அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளது. இக் காரணத்தினாலேயே சிறிலங்கா அரசானது இன்று தம் மக்களுக்கு தேவையான அத்தியாவசியத் தேவைகளையோ சேவைகளையோ பூர்த்தி செய்ய முடியாதுள்ள நிலையில் தம் நாட்டை சீரழித்துள்ளது. இந்த நிலை வருமென்பதை துல்லியமாகக் கணிப்பிட்டு நாம் கடந்த காலங்களில் எதிர்வு கூறினோம்.*

*சிறிலங்கா ஆட்சியாளர்கள் மாத்திரமல்லாது பௌத்த சிங்கள வாதத்தினை தொடர்ச்சியாக முன்னெடுத்து கொண்டிருக்கும் மத பீடங்கள், அரசியல் விற்பன்னர்கள், வெகுசனத் தொடர்பு ஊடகங்கள், அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோருடன் மெத்தனமான அணுகுமுறையைக் கடைப் பிடித்த சர்வதேச நாடுகளும் இந்த அவல நிலைக்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாவர்.*

020 8808 0465 | news@britishtamilsforum.org
Unit 1, Fountayne Business Centre, Broad lane, London N15 4AG

# பிரித்தானிய தமிழர் பேரவை
# பிரித்தானியா

மே 25, 2022

- *பல பத்தாண்டுகளாக சிறிலங்காவில் தொடரும் வன்முறை சுழற்சிக்கான அடிப்படைகள் கண்டறியப்பட வேண்டுமாயின் சர்வதேச குற்றவியல் நீதி விசாரனைப் பொறிமுறை உடனடியாக உருவாக்கப்பட்டு மாபாதக குற்றம் புரிந்தவர்கள், இராணுவ, அரசியல் உயர்பீடங்கள் உரிய தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.*

- *தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை பூர்த்தியாக்கும் ஒரு நீண்ட கால அரசியல் தீர்வு சர்வதேச மத்தியஸ்துவத்துடனும் உத்தரவாததுடனும் அமுலாக்கப்பட வேண்டும்.*

- *நீண்ட காலமெடுக்கும் இந்த நிகழ்ச்சி நிரலிற்கு அப்பால் ஒரு நீண்ட யுத்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதிலமடைந்த எம் தேசம் உடனடியாக உரிய அதிகாரங்களுடன் கூடிய ஒரு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டு புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் போன்ற மனிதாபிமான வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.*

*உலகிலேயே அதீத ராணுவமயமாக்கப்பட்ட நாடுகளில் சிறிலங்கா முன்னிடம் பிடித்துள்ளது. கடந்த 38 ஆண்டுகளுக்கு மேலான அழிவுக்கான பாதையே சிங்கள தேசத்தினை இந்த கையறு நிலைக்கு தள்ளி விட்டுள்ளது. சிறிலங்கா அரசினை எதிர்த்து போராடும் சிங்கள சகோதரர்கள் பக்கம் நியாயம் உள்ளது. அவர்கள் தமிழினப் படுகொலையை நிறுத்த முன் வர வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்களாக நாம் வேண்டிக் கொள்கின்றோம்.*

*அரசியல், ராஜதந்திர, பொருளாதாரத் தளங்களில் தொடர்ந்து வரும் பின்னடைவுகளை இனித் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் உள்நாட்டில் ஏற்படும் அதிருப்திகளைக் கையாள முடியாது சிறிலங்கா அரசு மிகப் பலவீனமாக உள்ளது. சர்வதேசம் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றது.*

*மாறி வரும் உலக ஒழுங்கினை எமக்கு சாதகமாக கையாள வேண்டும், சரியான வியூகங்கள் வகுக்கப்பட வேண்டும், நேச சக்திகளை வென்றெடுக்க வேண்டும், தமிழ் மக்கள் ஓரணியாக திரண்டெழ வேண்டும்,*

*எந்த சவால்கள் வரினும் எந்த பேரழிவு தலை காட்டினாலும் சோர்ந்து விட மாட்டோம் என தாயகம், தமிழகம் புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் உறுதி பூணுவோம். தாயகக் கனவினை நனவாக்குவோம்.*

***வரலாறு திருத்தப்படும் தருணமிது! உலகத் தமிழர்களே! ஒன்றுபடுவோம்!***

***தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.***

முற்றும்

**Contact: S Sangeeth** **Tel:** +44 (0) 7412 435 697
**Email:** news@britishtamilsforum.org

**Notes to Editors:**
**British Tamils Forum** exists to harness the skills and the knowledge of the members of the forum, well-wishers and significant others including mainstream decision makers in the UK with the aim of alleviating the sufferings of the Tamils community in the Island of Sri Lanka and to further their right to self-determination within a democratic frame work under pinned by international law, its covenants and conventions. For more information info@britishtamilsforum.org and/or visit: www.britishtamilsforum.org